June 2010

CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES (GTE) LIMITED

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

**தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு**


| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | 2 |
| ஆட்சிமுறைமை | 3 |
| மனித உரிமைகள் | 4 |
| பொருளாதார சூழ்நிலை | 6 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 7 |
| சுற்றுச் சூழல் | 7 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | 8 |

**மாகாண பகுப்பாய்வுகள்**

| | |
|---|---|
| **வடக்கு மாகாணம்** | |
| வவுனியா | 9 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 10 |
| **கிழக்கு மாகாணம்** | |
| திருகோணமலை | 11 |
| அம்பாறை | 11 |
| மட்டக்களப்பு | 12 |
| **மேல் மாகாணம்** | |
| கொழும்பு | 13 |


**தற்காலப் போக்குகளின் பகுப்பாய்வுச் சட்டகம்**

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | → |
| ஆட்சிமுறைமை | ↓ |
| மனித உரிமைகள் | ↓ |
| பொருளாதார சூழ்நிலை | → |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | ↘ |
| சுற்றுச் சூழல் | → |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | → |

## முக்கிய சாரம்சம்

இம்மாதத்தில் மிகவும் முக்கிய மாக கவனிக்க வேண்டிய விடய மாக இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளில் தொடர்ச்சியான சர்வதேச அழுத்தத்தை கருத லாம். யுத்தத்தின் இறுதி காலக் கட்டத்தில் "போர்க் குற்றங்கள்" தொடர்பிலான சந்தேகத்தின் பேரில் மனித உரிமைகள் மீறல் குறித்த விடயங்கள் சார்ந்து ஐ.நாவும், மேற்குலக நாடுகளும் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் தமக்கு விளக்கமளிப்பதற்காக மூன்று பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவை ஐ.நா செயலாளர் நாயகம் நியமித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதன் பொருட்டு அமெரிக்காவும், ஐ.நாவும் சிரே'ட அதிகாரிகளை கொழும்புக்கு அனுப்பியிருந்தது. இவை குறித்து, உள்ளக விவகாரங்கள் தொடர்பில் சர்வதேசம் தலையிடுவதாக சாடும் தமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக இலங்கைகயின் வெளிவிவகார அமைச்சர் ஐ.நாவுக்கும், அமெரிக்காவுக்கும் விஜயம் செய்திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வினால் "கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழு" நியமிக்கப்பட்டுள்ளது. இதன் மாற்று அணுகுமுறைகள் சர்வதேச சமூகத்தினை திருப்திகொள்ளச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவரும் எதிர்பார்க்கக் கூடிய வகையில் அரச ஊடகமானது, ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தொடர்பில் கண்டன மொழியில் அறிக்கைப்படுத்தியிருந்தது. சில முக்கியமான தனியார் பத்திரிகைகளும் அதே நிலையையே கடைப்பிடித்திருந்தன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவம் மற்றும் எதிர்கால வழிநடத்தல் தொடர்பில் காணப்படும் சிக்கலே அரசியல் செய்திகளில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது.

அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் அவசரமாக எடுக்கவுள்ள நடவடிக்கைக்கு முன்னர், பகிரங்க விவாதம் நடத்தப்பட வேண்டும் என்ற விடயமும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. சட்ட பேரவை, நிபுர்ணகள் ஒன்றிய நிறுவனங்கள், ராவய சிங்கள பத்திரிகை ஆசிரியர் மற்றும் சில அரசியலமைப்புச் சட்டத்தரணிகளால் இந்த விடயம் முன்வைக்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி முறை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கேள்விகள் அரசாங்கத்தின் யுத்தத்திற்கு பின்னரான பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சிக்கு தொடர்ச்சியான இடையூறாக இருக்கின்றன. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் பின்பற்ற வேண்டிய 15 நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ளது. அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதனை கொழும்பு நிராகரித்துள்ளது.

இலங்கையின் முன்னிலை சிங்கள பத்திரிகையான லங்காதீப தனது ஞாயிற்றுகிழமைக்கான பத்திரிகையொன்றில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக பொய்யான செய்தி வெளியிட்டிருந்தது. இவ்வாறான செய்திகள் உள்ளூர் பத்திரிகைகளின் நம்பகத்தன்மை குறித்த கேள்வியை எழுப்பியுள்ளன.

2010க்கான வரவுசெலவுத்திட்டத்தில் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு ரூ 202 பில்லியன் நிதியொதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தில் கவனஞ் செலுத்த வேண்டிய மீளிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் அக்கறையின்றி இராணுவத்திற்கான செலவீனங்களை அதிகரித்துள்ளமை பலராலும் விமர்சிக்கப்படுகின்றது. இராணுவத்திற்கான செலவீனம் குறைக்கப்பட்டு சமூக நலன்புரி, இடம்பெயர்ந்தவர்கள் புனர்வாழ்வு மற்றும் பொருளாதார அபிவிருத்தி குறித்து கவனஞ் செலுத்தப்பட வேண்டும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொள்ளும் வகையில் வரவுசெலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையை கட்டுப்படுத்தும் நோக்குடன் மேலதிக அரசாங்க செலவீனத்திற்கான சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகை

*(தொடர்ச்சி 2)*

**சுட்டிகளின் அடையாளம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றம் இல்லை | → | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ↑ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ↓ | | |

(தொடர்ச்சி 1)

குறைக்கப்பட்டுள்ளதனை அடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை உதவி வழங்கப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் 9மூ அளவுடன் மிகவும் கட்டுபடுத்தப்பட்ட அளவில் துண்டுவிழும் தொகை புதிய வரவுசெலவுத்திட்டத்தில் காணப்படுகின்றது.

இம்மாததத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் நாட்டின் சிறுவர் உரிமைகள் தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளன. சிறுவர் தொழிலாளர்கள் அதிகரித்துள்ளமையை அவற்றில் ஒன்றாக கூறலாம். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள 46மூ ஆன சிறுவர்கள் போ'ாக்கற்றவர்களாக உள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சு கற்கையின் மூலம் கண்டறிந்துள்ளது. தெற்கில் உள்ள கிராமப் பகுதிகளிலும், பெருந்தோட்டப் புறங்களிலும் இதேநிலையே காணப்படுகின்றது. சாதகமான மாற்றமாக பார்க்கும் போது எல்.ரி.ரி.ஈ சிறுவர் போராளிகள் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்த மாத இறுதியில் வன்னியில் உள்ள இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 50,000ஆக குறைவடைந்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களில் 42,000 பெண்கள் கணவனை இழந்தவர்களாவர். அவர்களில் பலருக்கு பிள்ளைகள் உண்டு. இந்த பிரிவினர் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. எஞ்சியுள்ள சுமார் 50,000 இடம்பெயர்ந்தவர்கள் அடுத்த இரண்ட மாதத்தில் மீளக்குடியமர்த்தப்படல் வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இடம்பெயர்ந்தவர்கள் வீடமைத்துக் கொள்வதற்கான சலுகை அடிப்படையிலான கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலை சீர்திருத்தங்கள் சில இந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த திருத்தங்களின் கீழ் சிறு குற்றங்களுக்காகவும், சிறு குற்றங்களுக்கு அபராதம் வழங்க இயலாத நிலையிலும் தண்டனை அனுபவிப்பவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். சிறைச்சாலைகளில் சனநெருக்கடியை குறைப்பதற்கும், சிறைக்கைதிகளுக்காக அரசாங்கம் செலவிடும் பணத்தை குறைப்பதற்குமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் பணிபுரிவதற்காக 269 தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மீளிணக்கச் செயற்பாட்டுக்கு உதவி புரியக் கூடிய பிரதான நடவடிக்கையாக இது காணப்படுகின்றது.

சுற்றுச் சூழல் தொடர்பில் அவதானிக்கும் போது தென்மேற்கு பருவக்காற்று மிகவும் வலுவான நிலையில் காணப்பட்டது. நாட்டின் தென்மேற்கு பகுதியில் இதன் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதற்கு எதிர்மாறாக அம்பாறை மாவட்டத்தில் வரட்சி நிலைமை பதிவாகியிருந்தது. இதன் காரணமாக மாவட்டத்தின் சில பகுதிகளில் குடிநீருக்கு பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

திண்ம கழிவுகளை அகற்றுவதற்கான முறையான திட்டமொன்று இல்லாமையினால் கொழும்பில் மீண்டும் கால்வாய்களில் குப்பைகள் நிறையும் பிரச்சினை தோன்றியுள்ளது.

போதிய உணவு மற்றும் அடிப்படை பராமரிப்பு இன்மை தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்யும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக முதியோருக்கான தேசிய செயலகம் தெரிவிக்கின்றது. அடுத்த இரண்டு தசாப்தங்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய அபாயம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த தகவல் பெறப்பட்டுள்ளது.

# தேசிய பகுப்பாய்வு

## அரசியல்

இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை வடிவமைக்கக் கூடிய பல முக்கிய நிகழ்வுகள் ஜூன் மாதத்தில் இடம்பெற்றன. நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பாதுகாப்புக்கான செலவு குறிப்பிட்டளவு ஒதுக்கப்பட்டிருந்தது. அத்துடன் புனர்வாழ்வு நிகழ்ச்சிகளுக்கும் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருந்து பிளவுபட்டதாக, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஆகியோரின் பிரதிநிதிகளின் மேற்பார்வைக்கு ஆதரவு தெரிவித்து வரும் நிலைப்பாட்டையே கொண்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் பலதரப்பு விவகாரங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கு பொறுப்பான விசேட உதவியாளர் சமந்தா பவர் மற்றும் ஐ.நா செயலாளர் நாயகத்தின் ஐ.நாவின் அரசியல் விவாகாரங்களுக்கான விசேட பிரதிநிதி, லியம் பொக்ஸ் ஆகியோரின் விஜயத்தினைத் தொடர்ந்து முன்னாள் நீதியரசர் சி.ஆர்.டீ. சில்வாவின் தலைமையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவினால் நியமிக்கப்பட்டுள்ள “கற்ற பாடங்கள் மற்றும் மறுவாழ்வு ஆணைக்குழு” முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

இலங்கையின் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பில் தமக்கு தகவல் தெரிவிப்பதற்காக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார். இந்த குழுவுக்கு இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமாஅதிபர் மர்சுகி டருஸ்மன் தலைமை வகிக்கின்றார். மேலும், அமெரிக்க சட்டத்தரணி ஸ்டீவன் ரட்ணர் மற்றும் தென்னாபிரிக்க உண்மை மற்றும் மறுவாழ்வு ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் யஸ்மின் சூகா ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர். எவ்வாறாயினும், ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி கொழும்பில்

(தொடர்ச்சி 3)

(தொடர்ச்சி 2)
ஊடகவியலாளர்களை சந்தித்த போது, இலங்கையின் விடயங்களில் ஐ.நா நிபுணர்கள் குழு தலையிடக் கூடாது என குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பெற்ற பின்னரே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 2009ஆம் ஆண்டு மே மாதம் ஐ.நா செயலாளர் நாயகத்திற்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கும் இடையில் காணப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கையின் நடைமுறைப்படுத்தலின் நம்பகத்தன்மை தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் குழு கற்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இலங்கையில் நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்துக்கும், மறுவாழ்வுக்கும் அத்தியாவசியமான அஸ்திவாரமாக நம்பகத்தன்மை அமையும் என ஐ.நா வலியுறுத்தியுள்ளது.
இதேவேளை, இந்தியாவானது அரசியல் தீர்வின் அவசியம் குறித்து வலியுறுத்தி வருகின்றது. மறுசீரமைப்பை நோக்கி நகர்ந்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கான வாக்கெடுப்பு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளது. எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சி, கட்சிக்குள்ளான சாகச நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு ராஜபக்ஸவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக போராட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# ஆட்சிமுறைமை

## இராணுவ செலவீனங்கள் என்பது சமாதான காலத்தில் முன்னுரிமையை பிரதிபலிப்பதாக இல்லை

யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடமாகியுள்ள நிலையிலும் அரசாங்கம் இராணுவ ரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் அதிகம் கவனஞ் செலுத்துவதாக கருத்துக்கள் உள்ளன. அவசர காலச் சட்டங்களில் சில ஏற்பாடுகள் நீக்கியுள்ளமையின் மூலம் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டை குறைப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தன. எவ்வாறாயினும், யுத்தம் நிறைவடைந்து ஒருவருடங்கள் கடந்துள்ள நிலையில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது, அரசாங்கத்தின் யுத்த முன்னெடுப்புக்களுக்கு ஆதரவு வழங்கியவர்கள் மத்தியிலும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் பாதுகாப்புக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டமையிலிருந்து, எல்.ரி.ரி.ஈ யினரை தோற்கடிப்பதற்கான செலவு என நியாயப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. மறுபுறத்தில், தற்போது யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பாதுகாப்புக்கான செலவீனத்தை அதிகரிப்பதற்கு அராசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையானது சமாதானத்தின் பிரதிபலிப்பாக இல்லை. இக்காலப்பகுதியில் மீள்கட்டமைப்பும், மீளிணக்கமுமே மிகவும் அத்தியாவசியமான விடயங்களாகும்.

வரவுசெலவுத்திட்ட பிரேரணையில் அரசாங்கம் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை ரூ 202 பில்லியனாக அதிகரித்துள்ளது. கடந்த வருடங்களின் பாதுகாப்புச் செலவீனத்துக்கான நிதி ஒதுக்கீட்டு சராசரியான ரூ 26 பில்லியன்களின் பன்மடங்காக இது காணப்படுகின்றது. கடந்த வருட நிதி ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடும் போது கல்விக்காக ரூ 27 பில்லியனும், உயர் கல்விக்காக ரூ 20 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடும் பாரிய அளவினதாக காணப்படுவதனால், நலன்புரி மற்றும் பொது மக்கள் சேவைகளுக்கான ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு ரூ 5 பில்லியனால் குறைக்கப்பட்டு ரூ 53 பில்லியனாக காணப்படுகின்றது. இதேவேளை, மீள்குடியேற்ற அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு ரூ 3 பில்லியனாக காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் பாதுகாப்புக்கான அதிகளவிலான நிதி ஒதுக்கீடு தேச பாதுகாப்பு என்ற ஒரு காரணத்தினால் விளக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கும், ஏனைய அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் இடையில் காணப்படும் பாரியளவிலான வேறுபாட்டுக்கு காரணம் தொடர்ச்சியான நாட்டின் பாதுகாப்பு குறித்த அவசியம் காணப்படுகின்றமையே என அரசாங்க பேச்சாளர்கள் நியாயப்படுத்தி விளக்கியுள்ளனர். முன்னாள் யுத்தம் நடைபெற்ற பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய பொலிஸ்

நிலையங்களும், பாதுகாப்பு நிலையங்களும் அமைக்கப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குறித்த பகுதிகளின் பிரதான வீதிகளில் விஜயம் செய்பவர்களுக்கு இந்த ஏற்பாடுகளை காணக் கூடியதாக இருக்கும் என அவர்கள் கூறுகின்றனர். யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில், இலங்கையானது இராணுவத் தேவைகளுக்கு அதிகம் செலவும் செய்து, சுகாதாரம், கல்வி மற்றும் மீள்குடியேற்றத்திற்கு குறைவாக செலவிடுகின்றமையானதே குறிப்பிட வேண்டிய விடயமாகும். இராணுவத்துக்காக ஒதுக்கப்பட்டு நிதியின் அரைவாசிப் பங்கே சுகாதாரம், கல்வி மற்றும் மீள்குடியேற்றம் ஆகிய மூன்று துறைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உண்மையாக சமாதானம் வந்துவிட்டது என்றால், அதே நிலையே பரந்தளவில் நம்பப்படுவதாயின், பொருளாதார மற்றும் மனிதநேய மீள்கட்டமைப்புக்கள் அவசியமாய் இருக்க வேண்டும். இராணுவ மேம்படுத்தல் என்பதல்ல. பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை என்ற வடிவில் சமாதானம் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும், சமாதானமானது பொருளாதார, சமூக அபிவிருத்தியை கொண்டு வரும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகக் குறைந்தது இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாவிட்டால், மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை உருவெடுக்கும்.

# மனித உரிமைகள்

## மனித உரிமைகள் விடயங்கள்

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயம் இந்த மாதத்தில் மீண்டும் சர்வதேச கவனத்தை திருப்பியது. யுத்த காலத்தின் போதான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஜிஎஸ்பி வரிச்சலுகைகளை தொடர்ந்து வழங்குவதற்கு மனித உரிமைகள் தொடர்பான சில நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றுள்ளது. மேலதிகமாக, இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஐ.நா மற்றும் அமெரிக்காவில் இருந்து பிரதிநிதிகளும் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இந்த முன்னெடுப்புக்கள் அனைத்தும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்துவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சட்ட ஒழுங்கு நிலைமை

இந்த மாதத்தில் கடத்தல்கள் மற்றும் வேறு பாரிய குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வெள்ளை வானில் வந்த நபர்களால் கடுவளை பகுதியில் நான்கு பேர் கடத்தப்பட்டதாக செய்தி பதிவாகியுள்ளது. கடத்தப்பட்ட வெள்ளை வானின் இலக்கம் பலரால் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், கடத்தல் சம்பவத்தை கண்டதாகவும் சிலர் சாட்சியமளித்துள்ளனர். அங்குலானை பகுதியைச் சார்ந்த வங்கி முகாமையாளர் ஒருவரும் கடத்தப்பட்டதாக செய்தி பதிவாகியுள்ள நிலையில், கொழும்பின் பல பகுதிகளில் இருந்தும் கொலை செய்யப்பட்ட பிச்சைக்காரர்களின் உடல்கள் மூன்று கண்டெடுக்கப்பட்டுள்ளன. விசேட நுகர்வோர் அதிகாரிகள் என்று அச்சுறுத்தி வீதியோர வியாபாரிகளிடம் இருந்து கப்பம் பெற்று வந்த ஆறு பேரை பதவிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் பத்திரிகை செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவமும் இம்மாதத்தில் பதிவாகியுள்ளது. சந்தேகநபர் குறித்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றதையடுத்து பொலிஸார் விசாரணைகளை தொடர்கின்றனர்.

தனியார் வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் 15 வயது பாடசாலை சிறுமியொருவர் குழுவொன்றினால் கடத்தப்பட்ட சம்பவமும் கொழும்பில் பதிவாகியுள்ளது.
பணத்துக்காகவே இந்த சிறுமி கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் பிணைப் பணமாக ரூ 20 மில்லியன் கோரப்பட்ட போதிலும், இறுதியில் ரூ 2 மில்லியன் பெற்றுக் கொண்டு சிறுமி வெள்ளவத்தையில் விடுவிக்கப்பட்டுள்ளார். நாட்டின் சட்ட ஒழுங்கு நிலைமை சீர்கெட்டுள்ளமைக்கு இந்த சம்பவங்கள் உதாரணங்களாக இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த சம்பவங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தி, இவ்வாறான சம்பவங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு அல்லது இல்லாது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

## சிறுவர் உரிமைகள் விடயங்கள்

சிறுவர்களை வீட்டுத் தொழில்களில் ஈடுபடுத்தும் நடவடிக்கை இலங்கையில் தொடர்ந்தும் பாரிய பிரச்சினையாக உள்ளது. சிலாபத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தினர் சிலாபம் பகுதியில் நடத்திய திடீர் தேடுதலின் போது, சொகுசு மாடி வீடொன்றில் 11 வயது சிறுமி வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சிறுமி நுவரெலிய மாவட்டத்தின் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என கண்டறியப்பட்டுள்ளது. குறித்த சிறுவர்களுக்கு கல்வி மற்றும் பெற்றோர் வளர்ப்பு பராமரிப்பு உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.
தோட்டப்புறங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இவ்வாறான வீடுகளில் சிறுவர் தொழிலாளர்களாக நியமிக்கப்படுவதை தடுக்க முடியும். எனினும், அதற்கான நடவடிக்கைகள் போதியதாக இல்லை. இவ்வாறான சம்பவங்களை விசாரணை செய்து, சிறுவர்களை தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்துவதற்கு உதவி புரிபவர்களை அடையாளங் காண்பது அவசியமாகும்.

அண்மையில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போசாக்கின்மை வீதம் 46மூ ஆக அதிகரித்துள்ளமையை கண்டறியக் கூடியதாகவுள்ளது. இந்த நிலைமைக்கான பிரதான காரணமாக இருப்பது கடந்த காலங்களில் நிலவிய யுத்தமே. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்குத் தேவையான ஒழுங்கான உணவை வழங்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். அவர்களே இந்த மாகாணங்களின் நாளைய தலைவர்களாகும். இதற்கான உடனடி நிவாரண நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மாகாணத்தின் எதிர்கால சனத்தொகையில் பாதிப்பு ஏற்பட்டு நாட்டின் நிலைமையும் பாதிக்கப்படும்.

எல்.ரி.ரி.ஈ சிறுவர் போராளிகளாக இருந்த 12 வயதுக்கும் 17வயதுக்கும் இடைப்பட்ட 108 ஆண்களும், 90 பெண்களும் புனர்வாழ்வு அதிகாரிகளினால் தமது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த சிறுவர்களுக்கான பல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் கொழும்பின் பிரபலமான தமிழ் பாடசாலையில் வழங்கப்பட்டன. வாழ்க்கையை புத்துணர்ச்சியுடன் ஆரம்பிப்பதற்கான வசதிகளை அவர்களுடைய கிராமத்திலேயே வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

## எல்.ரி.ரி.ஈ சந்தேக நபர்களின் புனர்வாழ்வு

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ போராளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாது என அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பானது

*(தொடர்ச்சி 5)*

(தொடர்ச்சி 4)
வரவேற்கத்தக்கது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் 53 ஜோடிகளுக்கு வவுனியாவில் திருமணம் செய்து வைக்கப்பட்டது. இவர்கள் தொடர்ந்தும் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், புனர்வாழ்வு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் விடுவிக்கப்படவுள்ளனர். 10,000 எல்.ரி.ரி.ஈ சந்தேக நபர்கள் தொடர்ந்தும் காவலில் உள்ளனர். இவர்கள் தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து, 10மூ ஆனவர்கள் கல்வி அறிவு எதனையும் பெறவில்லை எனவும், 80மூ ஆனவர்கள் எட்டாம் தரக் கல்வியை நிறைவு செய்யாதவர்கள் எனவும் கண்டறிய ப்பட்டுள்ளது. அவர்களில் 4மூ ஆனவர்கள் சாதாரண தரத்தில் சித்தி பெற்றுள்ளனர். 4மூ ஆனவர்கள் உயர் தரத்தில் சித்திப் பெற்றுள்ளனர். இவர்களில் சிலர் பல்கலைக்க ழகத்திற்குச் சென்றுள்ளனர். சிலர் மாத்திரமே பட்டம் பெற்றுள்ளனர். இவர்களில் பலருக்கு தமது அடிப்படை உரிமையான கல்வி வழங்கப்படாமை துரதிரு'டவசமானது. எதுவிதமான அடிப்படைக் கல்வியையும் பெறாத வர்களுக்கு, ஆகக் குறைந்த வாசிப்பதற்கும், எழுதுவதற்குமான கல்வியறிவை வழங்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் குற்றச் செயல்கள் சம்பந்தமான ஆதாரங்கள் உள்ளவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்து, ஏனையோரை உடனடியாக விடுவிக்க வேண்டியதும் அவசியமாகும்.

## இடம்பெயர்ந்தவர்கள் விடயங்கள்

வன்னி நலன்புரி முகாம்களில் மீள்குடியேற்றத்திற்காக காத்திருக்கும் 49,634 இடம்பெயர்ந்தவர்கள் மாத்திரமே உள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவர்கள் அடுத்த மூன்று மாத காலப் பகுதியில் மீள்குடியேற்றப்படுவார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார். இதுவரை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 226,306 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், மீள்குடியேற்ற கொடுப்பனவு வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும், பலருக்கு இதுவரை எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.



மீள்குடியேற்றம் இடம்பெற்ற பல பகுதிகளில் நீர் தேவைக்கான பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. முறையான கழிப்பிட வசதிகள் இன்மையின் காரணமாக மக்கள் ஆற்றுக் கரையோரங்களை தமது தேவைகளுக்காக நாடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மீள்குடியேற்ற பகுதிகளில் டயரியா போன்ற நோய்த் தொற்றுத் தாக்கம் உருவாகியுள்ளது. எனவே, மீள்குடியேற்றப்பற்ற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை அவசியமாக இருக்கின்றது.

மோதல் காரணமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களில் 42,000 பேர் கணவனை இழந்த பெண்கள் என தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் 12,000 பேருக்கு தலா மூன்று பிள்ளைகள் உள்ளன. இவர்களின் தேவை குறித்து முன்னுரிமை வழங்கி கவனிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. யுத்தம் காரணமாக தமது குடும்பத்தின் தலைவரை இழந்தவர்கள், அதற்கான ஆவண ஆதாரத்தை சமர்ப்பிக்க முடியாமையினால் பல சிக்கல்களை சந்திக்கின்றனர்.

இது தொடர்பில் கவனஞ் செலுத்தியுள்ள அரசாங்கம் சுனாமி அனர்த்தத்தின் போது பின்பற்றிய நடைமுறைகளினைப் போன்று இவர்களுக்கும் இறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கை முறையாக முன்னெடுக்கப்பட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த ஆவணங்கள் இன்றி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

## பொலிஸ் சேவைக்கு உள்வாங்கப்படும் தமிழ் இளைஞர்கள்

இம்மாதததத்தில் 269 இளைஞர்கள் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள்களாக இணைத்துக் கொள்ளப்பட்டமை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான வசதிகள் இல்லாமையே வடக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்படாமைக்கு காரணமாக கூறப்பட்டு வந்தது. மக்களின் மனித உரிமைகள் மீறப்படாத வகையில் கடமையை முன்னெடுப்பது தொடர்பில் அவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

# பொருளாதார சூழ்நிலை

## வரவுசெலவுத்திட்டமும், வர்த்தக ஆதிக்கம் நிறைந்த பொருளாதா வர்ணனையும்

காலம் தாழ்த்தியதாக 2010 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் வெளியாகியுள்ள நிலையில், இலங்கையின் பிரதான வர்த்தக பங்காளர்களான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் நிலைப்பாடே இம்மாதத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. இலங்கையின் வருடாந்த பணவீக்க வீதம் 4.8வீ ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இது அரசாங்கத்திற்கு மிகவும் நல்ல பேரினப்பொருளியல் செய்தியாகும். அத்துடன், பருவத்திற்கான உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, விசேடமாக மரக்கறிகளின் விலை அதிகரிப்பு பொருளாதாரம் கட்டுப்பாடின்றி செல்கின்றமையை வெளிப்படுத்துகின்றன. வெளிநாட்டு பரிமாற்ற சேமிப்புக்கள் 5.0பில்லியன் அமெரிக்க டொலர்களாக நிலவுவதாக அதிகாரப்பூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக விலை ஸ்திரத்தன்மையும், ஸ்திரமான வெளிநாட்டு சேமிப்புக்களும் அரசாங்கத்துக்கு வரி குறைப்பு மற்றும் செலவீனங்களை அதிகரிப்பதற்கு பரவலான வரவுசெலவுத்திட்ட கொள்கையை உருவாக்க உதவி புரியும். எனினும், அரசாங்கத்திற்கு இந்த தெரிவுக்கான சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. அதற்கான பிரதான காரணம் மிகவும் உயர்வான வரவுசெலவுத்திட்ட துண்டுவிழும் தொகை கடந்த பெப்பரவரி மாதத்தில் 10வீக்கு நெருங்கியதாக இருந்தது. இதன் காரணமாக இலங்கைக்கான 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் உதவியின் மூன்றாம் தவணைப் பணமான 408மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச நாணய நிதியம் வழங்கவில்லை. துண்டு விழும் தொகையின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு சீன கடன்களின் ஊடாக அரசாங்கம் நிதியுதவி வழங்குகின்றது. மின்சக்தி நிலையங்கள், ஹம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு தேசிய அழகியற் கலை நிலையம் என்பன அவற்றில் உள்ளடங்கும். இந்த செயற்றிட்டங்களில் சில இடைக்கால பலனை தந்து வெளியீட்டை ஊக்குவிக்கக் கூடியன. ஏனையன நீண்ட காலத்தின் பின்னர் பலனளிக்கக் கூடியன. எனினும், அவை சில காலத்தின் பின்னர் பொருளாதார வளமாக மாறிவிடும்.

துண்டு விழும் தொகையில் சுழற்சி முறையிலான உள்ளடக்கம் இல்லை. அதன் ஒரு தவிர்க்க முடியாத ஓய்வூதியம், தேசிய கடனை ஈடு செய்தல் (ரூ 787 பில்லியன் -2010 ஆம் ஆண்டுக்கு) போன்ற பகுதி கட்டமைப்புச் சார்ந்த விடயங்களுக்கு உதவலாம். பாதுகாப்பு முதல் நுகர்வோர் மற்றும் உற்பத்தி உபபொருட்கள் போன்று வகைப்படுத்தக் கூடிய செலவீனுங்கள் காரணமாக எஞ்சிய துண்டு விழும் தொகை ஏற்படுகின்றது. கடந்த வருடத்தின் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடான ரூ 178பில்லியனிலிருந்து, 13வீ ஆல் அதிகரித்து 2010ஆம் ஆண்டுக்கு ரூ 202 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நலன்புரி செலவீனங்களுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பிலான நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்ததுடன், ஜனாதிபதித் தேர்தலில் ஜனவரி மாதம் உறுதி வழங்கப்பட்ட ரூ 2,500 சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை.

உள்ளக சந்தையில் நிதி சேகரிக்கும் நோக்குடன் இவ்வருட இறுதியில் 500மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பிணைமுறிகளை அரசாங்கம் விநியோகிக்கவுள்ளது. வெளிநாட்டு கடன் வீதம் பீ இலிருந்து பீ க்கு உயர்ந்துள்ளது. 2015 ஜனவரியில் ஏற்படக் கூடிய 7.4வீ வீத நெருக்கடியை கருத்திற் கொண்டு 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 500மில்லியன் டொலர் பிணைகளை சந்தையில் விநியோகித்தது. இலங்கை, கென்யா, உக்ரேன் போன்ற நாடுகள் இவ்வாறு உலக சந்தையில் பிணைமுறிகளை விற்பனை செய்யும். இது முதலீட்டாளர்களுக்கு உயர்ந்தளவு வட்டிவீதத்தை வழங்கியிருந்தன.

அண்மைய மற்றும் நீண்டகால பொருளாதார எதிர்கால வாய்ப்புக்கள் குறித்து நன்னம்பிக்கையுடன் உள்ளது. முதலாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.1வீ ஆக இருந்தது. சுற்றுலாத் துறை துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில், 2016ஆம் ஆண்டளவில் 2.5மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. விடுதிகள் மற்றும் உணவகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படாவிட்டால் இது சாத்தியமற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‘ இந்தியாவின் புதுடில்லிக்கு சென்றமையின் காரணமாக இந்தியாவுக்கும், இலங்கைக்குமான உத்தேசிக்கப்பட்ட முழுமையான பொருளாதார பங்குதாரர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. உத்தியோகப்பூர்வ ஆவண உடன்படிக்கையை அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை. இந்தியாவுடனான 12 வருட கால சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கைக்கு சிறந்த பலனை அளிக்கவில்லை என சிலர் குறிப்பிடுகின்றனர். விசேடமாக இலங்கை ஏற்றுமதிகளை குறைப்பதற்கான தடைகளாக இந்தியா இதனை பயன்படுத்துவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் சுயம் சார்ந்த சான்றிதழ்களை சமர்ப்பிக்க தவறியுள்ளமை தொடர்பிலும் இலங்கை அதிகாரிகள் மீது அவர்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இந்திய முதலீட்டாளர்கள் வரிச்சலுகை தீர்வை மூலம் இந்திய ஏற்றுமதிக்கான சிறந்த உற்பத்தி தளமாக இலங்கையை உருவாக்க தவறிவிட்டார்கள் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். மறுபுறத்தில், உத்தேசிக்கப்பட்ட முழுமையான பொருளாதார பங்குதாரர் உடன்படிக்கைக்கு ஆதரவாக கருத்து தெரிவிப்போர், வளர்ந்து வரும் இந்திய சந்தையில் பல்துறை சார்ந்த சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என குறிப்பிடுகின்றனர். தம்ரோ தளபாட உற்பத்தியாளர்கள் போன்ற சில உற்பத்தியாளர்கள் இந்தியாவில் பெற்றிருக்கக் கூடிய பொருளாதார செல்வாக்கை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். நாட்டின் அளவு அல்ல மிகவும் முக்கியமானது. பொருளின் தரம், விலை மற்றும் சிறந்த அல்லது சேவைக்கான சந்தைப்படுத்தலே முக்கியமானது. அவ்வாறுதான் பெல்ஜியம், சுவிட்சலாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகள் அவ்வாறே வெற்றியடைந்துள்ளன. அவர்களிடமிருந்து பல விடயங்களை இலங்கையும் கற்றுக் கொள்ள முடியும்.

# சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம்

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நாவின் செயலாளர் நாயகத்தால் மூன்று பேர் அடங்கிய நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், நாட்டின் இறைமையை கீழ்ப்படுத்தும் பலாத்காரமான முயற்சி என விளக்கி அச்சு ஊடகங்கள் தமது உளக்கொதிப்பை வெளிப்படுத்தியிருந்தன. எவ்வாறாயினும், முதல் பக்க செய்தி தலையங்கங்கள் ஒவ்வொரு பத்திரிகையிலும் மாறுபட்டனவாகவே இருந்தன. ஐலண்ட் பத்திரிகையின் பிரதான தலைப்பு செய்தி "கோமாளிகளுக்கு விசா இல்லை (ழே ஏஐளுயுளு குழுச வ்ரு ளுமேழுீநுசுளு)" என்பதாக அமைந்திருந்தது. இதேவேளை, டெய்லி மிரரில் "ஐ.நா நிபுணர்களுக்கு விசா இல்லை (ழே ஏஐளுயுளு குழுச வ்ரு ருே நுஓீநுசுவுளு)" என்ற தலைப்புச் செய்தி வெளியாகியிருந்தது. இதன் அடிப்படையில் பார்க்கும் போது குறித்த செய்தியில் ஐலண்ட் பத்திரிகை விமர்னப் போக்கை கையாண்டிருப்பதையும், டெய்லி மிரர் அறிக்கைப்படுத்தும் போக்கை கையாண்டிருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. செய்தியின் சாரம்சம் தொடர்பில் இரண்டு பத்திரிகைகளுக்கும் இடையில் வேறுபாடு இல்லாத போதிலும், இரண்டு பத்திரிகைகளும் செய்தியை எவ்வாறு மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முயற்சிக்கின்றன என்பதனை இதிலிருந்து காணக் கூடியதாகவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் சிங்கள பத்திரிகைகள் மாறுபட்டு இருந்தன. இந்த பெருமைக்குரிய நாட்டிற்கு பங்கம் விளைவிக்கும் நோக்கில் இந்த நிபுணர்கள் குழு நியமனம் இடம்பெற்றுள்ளதாக இந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இதற்கு நேர்மாறாக, அரச செய்தி பத்திரிகையான டெய்லி நியூஸ் பத்திரிகையில் இந்த செய்தி "அரசாங்கத்தினால் மறுப்பு சொல்லப்பட்ட குழு (குஜசுஆ ழே டீலு புழுஏநுசுஆநுவே)" என தலைப்பிடப்பட்டிருந்தது. இந்த செய்தியில் "தலையீட்டின் தெளிவான வடிவம்", "இறைமை மீதான ஆதிக்கம்" என்ற உபதலைப்புக்களும் இடப்பட்டிருந்தன. இவ்வாறான செய்தியிடலில் மற்றுமொரு முக்கியமான விடயமும் உள்ளது. இந்த செய்திகளே இலங்கை தேசமானது வெளியுலகத்தை எவ்வாறு நோக்குகின்றது என்பதனை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. எங்கள் நாடு என்ற விடயம் தொடர்பில் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் எந்தவொரு சிங்கள பத்திரிகையும் உலக விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவருவதில்லை. இதற்கு சிறந்த உதாரணமாக நாட்டில் அதிக எண்ணிக்கையில் விநியோகமாகும் ஞாயிற்றுக்கிழமை லங்காதீப பத்திரிகையின் தலையங்கத்தை காணலாம். மில்லியன் கணக்கான சிங்கள வாசகசர்களால் வாசிக்கப்படும் இந்த பத்திரிகையில் "ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி வரிச்சலுகையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்துள்ளது" என்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்த செய்தியின் மூலமாக உயர் பீடம் ஒன்று குறிப்பிடப்பட்டிருந்தது. தமக்கான கட்டுப்பாடுகள் காணப்படும் அரச ஊடகங்களைத் தவிர, தனியார் ஊடகங்களும் எதற்காக இந்த கட்டுப்பாடுகளுடன் செயற்படுகின்றன என்பதனை புரிந்து கொள்ள முடியவில்லை.

வித்தியாசமான செய்திகளை வெளியிடக் கூடிய பத்திரிகையாக ராவய பத்திரிகையை மக்கள் கருதுகின்றனர். இந்த மாதத்தில் ராவய பத்திரிகை மாத்திரமே உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பில் பகிரங்கமான விவாதங்களை முன்னெடுத்தது. அண்மையில் வெளிவந்த செய்தியில் ஒரு வித்தியாசமான கேள்வியை அது எழுப்பியிருந்தது. தற்போதைய அரசியலமைப்பை விளக்குவதற்கு "பஹுூபுத்தா" என்ற சிங்கள பதம் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த விமர்சனத்தின் தேவைக்காக நாங்கள் "கோமாளித்தனம்" என்ற பதத்தை பயன்படுத்துகின்றோம். இந்த அரசியலமைப்பு கோமாளித்தனமான நடவடிக்கையா? நாங்கள் கோமாளிகளா? அல்லது கோமாளித்தனம் என்ற பதம் அரசியலமைப்பு என்ற பதத்தையும் விளங்கப்படுத்துகின்றதா? போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. அரசியலமைப்பானது கோமாளித்தனமான நடவடிக்கை என குறிப்பிடும் ஆசிரியர், ஆனால், அந்த அரசியலமைப்பின் கீழ் அதிகாரத்திற்கு வந்த எவரும் கவர்ந்திழுக்கச் செய்பவர்களாக இல்லை என தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் உத்தேசித்துள்ள அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை உருவாக்குவதற்கு இலங்கை சட்டப் பேரவை நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்றை நியமித்துள்ளது. திடீர் சட்டமூலங்களாக திருத்தங்களை அரசியலமைப்பில் உள்ளடக்க வேண்டாம் எனவும் அரசாங்கத்திற்கு அந்த குழு ஆலோசனை வழங்கியுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு திருத்தி எழுதப்படலாம் என்பது குறித்தும் இந்த குழு கவனஞ் செலுத்தி வருகின்றது. 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஐலண்ட் பத்திரிகையில் கருத்து தெரிவித்துள்ள கலாநிதி. நிஹால் ெ ஜயவிக்ரம, 1972 மற்றும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டங்கள் அரசியல் அதிகாரத்தால் மக்கள் மீது திணிக்கப்பட்டதாக கூறியுள்ளார். அரசியலமைப்பு என்பது அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இடையிலான சமூக உடன்படிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# சுற்றுச் சூழல்

இந்த வருடம் மேற்கு பருவபெயர்ச்சி காலநிலை காரணமாக நிலவிய அதிக மழைவீழ்ச்சியினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் கடும் காற்று நிலைமை தொடர்ந்தும் சில பகுதிகளில் நீடிக்கின்றது. எவ்வாறாயினும், வெள்ள நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்தும் மழைக்காலநிலை காணப்படுகின்றது. களுகங்கையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. நாட்டின் பல பகுதிகளிலும் நிலவும் கடும் காற்று காரணமாக பல மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

*(தொடர்ச்சி 8)*

(தொடர்ச்சி 7)

இந்த மழைக்காலநிலை காரணமாக மீண்டும் கவனத்திற்கு கொள்ள வேண்டிய விடயமாக திண்ம கழிவு முகாமைத்துவம் என்பது வெளியாகியுள்ளது. பெருந்தொகையான திண்மக் கழிவுகள், கால்வாய்கள் ஊடாக கடலுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மழைக் காலநிலை காரணமாக இவை மீண்டும் கடற்கரையோரங்களில் தேங்கி காணப்படுகின்றன. இது சுற்றுச் சூழலுக்கு மாசினை ஏற்படுத்தியதோடு அல்லாமல், சுகாதார பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது. தற்போது காணப்படும் டெங்கு நோய்த் தாக்கம் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக இருக்கின்றன. முறையான திண்மக் கழிவு முகாமைத்துவம் இன்மையினால் சனத்தொகை செறிவு உள்ள நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுச் சூழல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கந்தளாய் சிஜசி வாழைச்செய்கை அமைப்பு தொடர்பில் சர்ச்சைக்குரிய நிலைமை காணப்படுகின்றது. இந்த வாழைச் செய்கை வனப்பகுதி அருகில் முன்னெடுக்கப்படும் இந்த வாழைச் செய்கை வேறு பல மாவட்டங்களிலும் (உடவளவை தேசிய சரணாலயம், லுணுகம்வெஹர) முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம்

## *இடம்பெயர்ந்தவர்கள்*

எஞ்சியிருக்கும் சுமார் 50,000 இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கையின் படிநிலையாக இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை வாரத்திற்கு 2,000 என்ற சராசரியில் குறைந்து வருவதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அடுத்த மூன்று மாதங்களில் வவுனியாவில் அமைந்துள்ள மனிக் பார்ம் பாரிய முகாமையும், யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய அளவிலான இரண்டு முகாம்களையும் உள்ளடக்கிய எஞ்சியுள்ள அனைத்து இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களையும் மூடிவிட வேண்டும் என இலங்கை ஜனாதிபதி மே மாதம் 28ஆம் திகதி அறிவித்திருந்தார். எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை நிறைவு செய்து விடலாம் என புதிய மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்துள்ளார். முன்னர் கூறப்பட்டிருந்த காலக்கெடுவான ஏப்ரல் மாதம் என்பது பொருத்தமானது அல்ல எனவும், இந்த நடவடிக்கை நாட்டின் பிரதான முக்கியத்துவம் வாய்ந்தாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1985ஆம் ஆண்டு வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள குடும்பங்களையும் மீள்குடியேற்ற அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இலங்கையின் வடக்குப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் தங்கியிருப்பவர்களின் உளநிலை தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டும் என மடுப் பிரதேசத்தில் உள்ள குருமார் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் தங்க வைத்திருப்பதனால் அவர்களின் உளநிலை மேலும் மோசமடையும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். போதிய வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையே மீள்குடியேற்றம் தாமதிப்பதற்கு முக்கியமான காரணங்களாக தெரிவிக்கப்படுகின்றன. இந்தியா, ஜப்பான் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிடமிருந்தே உதவிகள் மாறி மாறி கிடைத்த வண்ணம் உள்ளன. வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு சலுகை அடிப்படையிலான வீடமைப்பு கடன்களை வழங்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் வீடொன்றுக்கு தலா ரூ 325,000 வழங்கப்படவுள்ளது. ஒரு மாத காலப்பகுதியில் மாவட்டச் செயலாளர் ஊடாக வீடமைப்புக்கான காணி கண்டறியப்படுகின்றது. நான்கு மாதத்திற்குள் வீடமைப்பு பணிகள் நிறைவடையும். வீட்டினை பயன்படுத்துவதற்கு ஆரம்பித்தமை முதல் ஆறு மாதங்களில் கடன்கள் மீளப் பெறப்படும்.

## *முன்னாள் போராளிகள்*

ஜூன் மாதம் 13ஆம் திகதி வவுனியாவின் பம்பைமடு வாளகத்தில் பாரிய திருமண வைபவம் இடம்பெற்றது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் 53 ஜோடிகளுக்கு, இதன் போது திருமணம் செய்து வைக்கப்பட்டது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வந்த முன்னாள் போராளிகள் பலரின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டதாக முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்தார். புனர்வாழ்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள முன்னாள் எல்.ரி.ரி.ஈ போராளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என தற்போதைய புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார். சமுதாயங்களுக்கு இடையிலான ஒழுங்கிணைவுக்கு இந்த நடவடிக்கை சாதகமான படிநிலையாக காணப்படும். இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக 269 இளைஞர்களுக்கு பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் என்ற நிலையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் எல்.ரி.ரி.ஈ போராளிகளுக்கு போக்குவரத்துச் சபையில் 100 வேலைவாய்ப்புக்களை அளிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் கோண்டாவில் பஸ் டிப்போவின் ஊடாக வாகனஞ் செலுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதேவேளை, தனியார் துறையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 1,500 பேரை தமது புடவை கைத்தொழிற்சாலைக்கு இணைத்துக் கொள்வதற்கு முன்வந்துள்ளது. இவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் வவுனியாவில் வழங்கப்படவுள்ளன.

## *சிறைக் கைதிகள்*

இதேவேளை, சிறையில் உள்ளவர்களின் எண்ணிக்கையை 50மூ ஆல் குறைப்பதே, தமது எதிர்பார்ப்பு என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் ஆரம்ப கட்டமாக சிறிய சிறைச்சாலைகளில் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெறும் சிறைக்கைதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை விடுதலை செய்யும் சட்டதிருத்தம் குறித்தும் இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இவர்கள் வீதி புனரமைப்பு, கட்டமைப்பு மற்றும் பொது

(தொடர்ச்சி 9)

(Continued from page 8)

தொழிலாளர்கள் போன்ற சமுதாய பணிகளுக்காக விடுவிக்கப்பட்டலாம். சிங்கள நாளேட்டில் வெளியான செய்திக்கு அமைய, சிறு சிறு தவறுகளை செய்பவர்களையும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறைக்கம்பிகளுக்குள் அடைத்து வைப்பதற்கே இலங்கையின் வருமான வரி செலுத்துபவர்கள் அதிகமாக கட்டணம் செலுத்துகின்றனர். சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செலவீனங்களுடன், சிறைச்சாலை பராமரிப்பு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்குதல், உணவு இன்னபிற விடயங்கள் உள்ளடங்கலாக சிறைக்கைதி ஒரு-வருக்கு தலா ரூ 10,000 செலவிடப்படுகின்றது. அதே அறிக்கையில், ரூ 650 பெறுமதியான பொருளை திருடிய ஒருவரை சிறையில் வைத்திருப்பதற்காக வருமான வரி செலுத்துபவரின் ரூ 30,000 பெறுமதியான பணம் செலவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிய உணவு பொதி ஒன்றை திருடியமைக்காக நபர் ஒருவருக்கு மூன்று மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மத்தியில் காசநோய் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வெலிக்கடை சிறைச்சாலையிலேயே அதிக எண்ணிக்கையிலான காசநோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். நோய் பரவல் வேகமாக இருப்பதனால் காசநோய் ஏற்பட்டதாக இனங்காணப்பட்ட 70 சிறைக் கைதிகளை பரமாரிப்பதற்கான தனியான பிரிவு வெலிக்கடை சிறைச்சாலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## வறுமையில் பாதிக்கப்பட்டவர்கள்

தென் மாகாணத்தில் சுகாதார அமைச்சு, யுனிசெப் மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியன இணைந்து முன்னெடுத்த போ'க்கு மற்றும் உணவு பாதுகாப்பு ஆய்விலிருந்து, ஹம்பாந்தோட்டை மாவட்டம், பெருந்தோட்டத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த கிராமப் பகுதியைச் சேர்ந்த மக்களே அதிகளவில் நிறைகுறைவு மற்றும் போ'க்கின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. நாட்டின் வேறுபட்ட பிராந்தியங்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றமையும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை, பெருந்தோட்டத்துறை போன்ற கிராமப் பகுதிகளில் போ'க்கின்மை, நிறைகுறைவு என்பன காணப்படுகின்ற நிலையில், கொழும்பு உள்ளடங்கிய நகரப் பகுதிகளில் உணவு வீண் விரயம் அதிகம் காணப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. போ'க்கின்மை தொடர்பான சவாலை எதிர்நோக்கியுள்ள, விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு தேவையான போ'க்கு உணவு வழங்க வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு எடுத்துக் காட்டியுள்ளது.

## முதியோர்

கடந்த சில வருடங்களில் புறக்கணிக்கப்பட்ட மற்றும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய முதியவர்கள் செயலக புள்ளியியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2010 ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் தமது பிள்ளைகளின் சிரமங்களை எதிர்நோக்கும் அல்லது புறக்கணிக்கப்பட்டமை ஆகியன தொடர்பில் தேசிய முதியோர் செயலக பராமரிப்புச் சபைக்கு சுமார் 50 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக செயலகத்தின் பணிப்பாளர் திருமதி. ே ஜ. கிரு'ணமூர்த்தி தெரிவிக்கின்றார். கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடும் போது இது பாரிய வளர்ச்சியாகும் என அவர் குறிப்பிட்டார். இந்த பராமரிப்புச் சபை ஆரம்பிக்கப்பட்ட கடந்த சில வருடங்களில் மாத்திரம் இதுவரை 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர்களில் பெரும்பாலனோர் தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாதவர்கள் ஆவர். இதற்கு நிவாரண நடவடிக்கையாக, பெற்றோரை பராமரிப்பதன் அவசியம் குறித்த உளவள ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பிரதேச செயலகங்களில் செயலகம் ஆரம்பித்துள்ளது. அடுத்த சில தசாப்தங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியங்கள் இருப்பதனால், மனிதநேய துறை கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான பகுதியாக இது இருக்கின்றது.

## வரட்சி

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழைக் காலநிலையினால் வெள்ள அபாயம் காணப்படுகின்ற நிலையில், அம்பாறை மாவட்டத்தில் வரட்சி ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. தற்போது பன்னலகம, மூவங்கல, மல்வத்தை ம0ற்றும் கொட்டவெஹர ஆகிய பகுதிகளில் குடிநீருக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தினால் குடிநீர் விநி-யோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், எடுக்கப்பட்டுள்ள இந்த நிவாரண நடவடிக்கைகள் போதியதாக இல்லை என கிராம மக்கள் குற்றஞ் சுமத்தி வருகின்றனர்

# மாவட்டச் சூழ்நிலை

## வவுனியா

ஜுன் மாதத்தின் ஆரம்ப காலப்பகுதியை கவனத்திற் கொண்டு நோக்கும் போது, வவுனியாவில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 64,000க்கும் அதிகமானதாக இருந்தது. இவர்கள் முல்லைத்தீவு மற்றும் வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். வவுனியா அரசாங்க அதிபரின் அறிக்கைக்கு அமைய மாத இறுதியில் இந்த எண்ணிக்கை 48,000ஆக குறைந்திருந்தது. மீள்குடியேற்றத்திற்காக புதிய பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டுள்ள நிலையில், இரண்டு புதிய பிரதேச செயலகங்கள் ஓமந்தையிலும், பூவரசங்குளத்திலும் திறக்கப்படவுள்ளன. இவற்றுடன் இணைந்து வவுனியாவில் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை ஆறாக உயரும். மீள்குடியேற்றப்பட்ட

(தொடர்ச்சி 10)

(தொடர்ச்சி 9)
மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் உலக உணவுத் திட்டத்தின் அலுவலகம் கிளிநொச்சியில் திறக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் இறுதி கட்டத்தின் போது வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த சந்தர்ப்பத்தில் பெற்றோரிடம் இருந்து தனித்துவிடப்பட்ட ஐந்து வயதுக்கு குறைந்த சிறுவர்களில் சிலர் இதுவரை தமது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. எவ்வாறாயினும், மோதலின் போது குடும்பங்களை விட்டு பிரிந்தவர்களை மீளச் சேர்க்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, சட்டரீதியாக திருமணம் செய்து கொள்ளாதவர்கள் சிலர் உட்பட, 53 ஜோடிகளுக்கு பம்பைமடு தடுப்பு முகாமில் வைத்து திருமணம் செய்து வைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் புனர்வாழ்வின் பின்னர் தமது புதிய வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு இயலும்.

புனர்வாழ்வு முகாம்களுக்கு புனர்வாழ்வுக்காக அனுப்புவதற்கு உத்தரவளிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ சந்தேக நபர்கள் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படாமல், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வவுனியா நீதவானும், பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். 11,000 சந்தேகநபர்கள் தற்போது சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, மேலும் 14,000பேர் வேறு சில தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1,000 பேர் மாத்திரமே புனர்வாழ்வுக்காக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்ற பகுதிகளுக்கு தனித்தனியாக விஜயம் செய்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள், அங்கு தாம் கண்ட விடயங்கள் தொடர்பில், உடனடியாக கவனஞ் செலுத்தப்பட வேண்டிய வேறுபட்ட பல அம்சங்களை சுட்டிக்காட்டி தலா அறிக்கையொன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளனர். வடக்கில் உள்ள சுமார் 22,000 மாணவர்களுக்கு தேவையான கல்வி வசதிகளை வழங்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், முகாம்களில் உள்ள சிறுவர்கள் போ'க்கின்மையில் பாதிக்கப்பட்டுள்ளதால் போ'க்கு விடயங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கு அமைய வவுனியாவில் உள்ள 51மூ ஆன சிறுவர்கள் போ'க்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மீள்குடியேற்றப்பட்டுள்ள 200,000 மக்களுக்கு வாழ்வாதார மற்றும் தங்குமிட வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் வாழ்க்கை நிலை மெதுவாக முன்னேற்றமடைந்து வருகின்றது. ஆனாலும், சில விடயங்கள் தொடர்பிலும் மேலும் கவனஞ் செலுத்தப்படவுள்ளது.

உதாரணமாக, 100மூ தமிழர்கள் வசிக்கும் கிளிநொச்சியில் அண்மையில் திறக்கப்பட்ட சதொச நிலையத்தில் பணியில் இருப்பவர்களில் 99மூ ஆனவர்கள் சிங்கள ஊழியர்களாகும். சுமார், 180,000 இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ள போதிலும், அவர்களில் 40மூ ஆனவர்கள் அவர்களுக்கான மீள்குடியேற்றத்திற்கான போதிய வீடமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், தற்போதும் கிறிஸ்தவ தேவாலயங்கள், கோயில்கள், பாடசாலைகள் மற்றும் கைவிடப்பட்ட கட்டடங்கள் போன்ற இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினர் வன்னியில் சிறப்பாக வெசாக் பண்டிகையை கொண்டாடினர். பல தமிழ் வர்த்தகர்களும் இதற்கான நிதியுதவிகளை வழங்கியிருந்தனர். மூன்று தசாப்தகால யுத்தத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களை கௌரவிக்கும் வகையில் நாடளாவிய அனு'டானங்கள் 18ஆம் திகதி இடம்பெற்றன. ஊடக அறிக்கைகளுக்கு அமைய சுமார் 23,327 இராணுவத்தினர் இந்த யுத்தத்தில் உயிரிழந்துள்ளனர். சுமார் 59,037 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். சிவில் மக்கள் உட்பட 80,000 பேர் 2006ஆம் ஆண்டு இறுதி வரை இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர். யுத்தத்தின் இறுதி கட்டத்தின் போது 2009ஆம் ஆண்டு ஜனவரி முதல், மே வரையான காலப்பகுதியில் 6,500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணம்

ஏ 9 வீதி மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் போக்குவரத்து அதிகரித்துள்ளது. தெற்கு மற்றும் வேறு பகுதிகளில் இருந்து வரும் வர்த்தகர்கள் சந்தையை தனியுரிமையாக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்வதாக மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

மாவட்டத்துக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறவேண்டும் என்ற ஏற்பாடு உள்ளமையே இதற்கு காரணமாகும். எனினும், பெரும் அளவிலான உள்ளூர் மக்கள் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வருகின்றனர்.

பல நிறுவனங்கள் மாவட்டத்தில் தமது கிளையை ஆரம்பித்துள்ளன. பல முதலீட்டாளர்களின் கவனம் மாவட்டத்தின் பக்கம் திரும்பியுள்ளது. புதிததாக உணவு விடுதிகள், தங்குமிட விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தேசிய வங்கி கிளையும், தொலைத்தொடர்பாடல் நிறுவனங்களும் திறக்கப்பட்டுள்ளன. இதேவேளை, சில தனியார் சர்வதேச வங்கிகளும் தமது கிளைகளை திறக்க உத்தேசித்துள்ளன. இதன் காரணமாக மாவட்டத்தின் நிதித்துறை

(தொடர்ச்சி 11)

(தொடர்ச்சி 10)

வளர்ச்சியடைந்துள்ளது. முதலீட்டு நிறுவனங்களும் வடக்கு நோக்கியே செல்கின்றன. மாவட்ட வரலாற்றில் முதன் முறையாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டமை வரவேற்கத்தக்க மாற்றமாகும். வாகன கடன் திட்டங்களை வழங்கும் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் தமது சேவைகளை அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும், இந்த மாற்றங்கள் தொடர்பில் மாவட்ட மக்கள் பெரிதாக அக்கறையுடன் இல்லை. இந்த மாற்றங்கள் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கானது என்பது அவர்களது கணிப்பாக இருக்கின்றது.

சமூக அளவிலும் மாவட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பயிற்சி நிகழ்வுகள், செயலமர்வுகள், கூட்டங்கள், பரப்புரை நிகழ்வுகள் என்பன நடைபெற்று வருகின்றன. இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மீள்குடியேறியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சில நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயான போக்குவரத்து தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சில பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையால், தமது காணிக்கே செல்ல முடியாத நிலையுள்ளதாக அவர்களில் சிலர் முறையிடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் டெங்கு காய்ச்சலும் துரிதமாக பரவி வருகின்றது. மாவட்டத்தில் அதிகரிக்கும் சுற்றுலாப் பயணிகளால் ஏற்பட்டுள்ள குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளினால் சுற்றாடல் மாசடைந்துள்ளது.

## மன்னார்

அரச நிர்வாகத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் துரித கதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மன்னார் வைத்தியசாலையில் அண்மையில் புதிய மகப்பேற்று சிகிச்சைப் பிரிவு ஒன்று திறந்து வைக்கப்பட்டது. சீன அரசாங்கத்தின் உதவியுடன் மன்னார்-பூநகரி வீதி புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 20% ஆன பணிகள் நிறைவடைந்துள்ளன.

மீள்குடியேற்றப்பட்ட 90% ஆனவர்கள் இதுவரை வேலைவாய்ப்பு இன்றி உள்ளனர். இது தொடர்பில் அரசாங்க அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாந்தை தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு விஜயம் செய்த அரசியல்வாதிகள் மீள்குடியேற்றம் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் துயரம் தொடர்பில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை அடுத்து, 215ஆவது படைப்பிரிவு கர்னல் அவசர கூட்டம் ஒன்றை கூட்டியிருந்தார். அரசாங்க அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், இடம்பெயர்ந்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் உடனடியாக கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இடம்பெயர்ந்தவர்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இரண்டு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டன. மீள்குடியேறிய இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானோருக்கு ஆறு மாதங்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்டன. பெரும-ளவில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து மேலும் ஆறு மாதங்களுக்கு, பெரும்போகம் விளையும் வரை இந்த உலர் உணவை வழங்குவதற்கு உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் சுமார் 150 குடும்பங்கள் மடுவீதி சந்தியில் வாழ்ந்து வந்தன. இந்த சிங்கள குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனர். சுமார் 25 குடும்பங்கள் இதுவரை தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர். இந்த குடும்பங்கள் தற்போது அருகில் உள்ள பௌத்த விகாரை வளாகத்தில் வசித்து வருகின்றன. 25 வருடங்களின் பின்னர் தொழுகைக்காக விடத்தல்தீவு ஜும்மா பள்ளிவாசல் திறந்துவிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் கல்வி நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். ஆகக்குறைந்த கல்வித் தரத்திலும் கீழான கல்வி வசதிகளும், சந்தர்ப்பங்களுமே மாவட்டத்தில் உள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். 20,000க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடருவதற்காக முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். தமது கல்வியைத் தொடருவதற்கான நி-தியுதவி வேண்டி அரசாங்கத்திடமும், நலன்புரி சேவையாளர்களிடமும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருகோணமலை

மாவட்டத்தில் அமைதியான நிலைமை காணப்படுகின்றது. மக்களுடைய வாழ்க்கை தரம் துரிதமாக முன்னேறி வருகின்றது. பொதுமக்கள் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடு இல்லை. நாளாந்தம் யாழ்ப்பாணத்திற்கும், திருகோணமலைக்கும் இடையிலான பஸ் சேவை இடையூறு இன்றி நடைபெற்று வருகின்றது.

செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு போதிய பணவசதி இன்மையால் பல உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது ஊழ-ியர்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளன. இதனால் வேலை-

(தொடர்ச்சி 12)

(தொடர்ச்சி 11)

லயில்லாப் பிரச்சினை உருவாகியுள்ளது. மழைக் காலநிலை காரணமாக மாவட்டத்தில் வாழ்வாதார தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் மீன்களின் விலை அதிகரித்து, மீனவர்களின் வருமானம் குறைவடைந்துள்ளது.

பொசன் பண்டிகை சிங்கள, தமிழ், முஸ்லீம் சமூகத்தினரின் ஒருங்கிணைந்த பங்குபற்றுதலுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இலங்கை மேர்சன்ட் வங்கி தனது கிளையை திருகோணமலையில் திறந்துள்ளது. இதன் கீழ் தெரிவு-செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆரம்ப கட்டமாக உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத் துறை மேம்பட்டு வருவதுடன், விடுமுறைக் காலங்களில் ஹோட்டல்கள், தங்குமிட விடுதிகளில் கூட்டம் நிறைந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக மேலதிக பணிகளுக்கு ஹோட்டல்கள், விடுதிகளில் ஆட்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இது வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவு கட்டுப்படுத்துகின்றது.

பல ஆண்டுகளின் பின்னர் திருகோணமலை, ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தது. இந்த கண்காட்சிக்கு வவுனியா, மட்டக்களப்பு மற்றும் யாழ் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வருகை தந்திருந்தனர். பாடசாலை நுழைவாயிலில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தமையே கண்காட்சியில் அனைவரது கவனத்தையும் கவர்ந்த விடயங்களில் ஒன்றாக இருந்தது.

அத்துடன், திருகோணமலையில் மாவட்ட ஊடக இல்லமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அமெரிக்காவின் இன்டர்நியூஸ் நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது. ஊடக மற்றும் ஊடக தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் இந்த ஊடக இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை

தேர்தல் கால நிலைமைகள் மாறி தற்போது மக்கள் வாழ்க்கையை முன்கொண்டு செல்வது தொடர்பிலான யதார்த்த நிலைமை குறித்து சிந்தித்து வருகின்றனர். யுத்தத்தின் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட அறுவடையை ஆரம்பித்த விவசாயிகள் சிறந்த விளைச்சலை பெற்றுள்ளனர். எவ்வாறாயினும், நெல் கொள்வனவு தொடர்பில் அரசாங்கத்திடம் முறையான பொறியமைப்பு இன்மையின் காரணமாக இடைத்தரகர்கள் அதிக லாபம் பெறுவதாக அவர்கள் குறை கூறுகின்றனர். எனவே, நெல்லுக்கான பொருத்தமான விலையை தீர்மானித்து, நெல் கொள்வனவு தொடர்பில் முறையான பொறியமைப்பை உருவாக்க வேண்டும் என விவசாயிகள் அரசாங்கத்தை கோருகின்றனர்.

இந்த விடயங்களைத் தவிர்த்து, யுத்தத்தின் பின்னரான அமைதியை மிகுந்த மகிழ்ச்சியுடன் மக்கள் அனுபவித்து வருகின்றனர். சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் சமூகத்தில் பல மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதுவித தடையுமின்றி மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்குடன், தற்போது அயல் கிராமங்களுக்கான இரவு நேர பஸ் சேவையை போக்குவரத்துச் சபை ஆரம்பித்துள்ளது. குறிப்பிடத்தக்க அளவு துணை ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடருகின்றன. இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்து சமூகங்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

## மட்டக்களப்பு

ரி.என்.ஏயும், ஏனைய தமிழ் கட்சிகளும் தமது வேறுபாடுகளை ஒருபுறம் தள்ளிவிட்டு மாவட்ட அபிவிருத்திக்காக ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்தவுடன் மாவட்டத்தின் அரசியல் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை, அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முஸ்லீம் கட்சிகளும் தமது ஆதரவை தெரிவித்து வருகின்றன.

அமைச்சர் பசில் ராஜபக்ஸ தலைமையிலான மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு மாவட்ட கட்சிகள் அனைத்தும் ஆதரவு வழங்கி வருகின்றன. இந்த குழு தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தி, விவசாயம், மீன்பிடி, உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகள் தொடர்பில் பல திட்டங்களை முன்வைத்துள்ளது. அத்துடன், அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் வடிவங்களான கமநெகும, ஜாதிக சவிய போன்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தைப் போன்றே காணி சார்ந்த பிரச்சினைகள் இங்கும் காணப்படுகின்றன. இது தொடர்பில் காணி உரிமையாளர்கள் அரசாங்க அதிகாரிகளிடம் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இந்த மாதத்தில் துணை ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் குறிப்பிடக் கூடிய அளவில் குறைந்துள்ளன. புனர்வாழ்வு நடவடிக்கையை அடுத்து இளைஞர்கள் சமூகத்துடன் ஒன்றிணைந்துள்ளனர்.

இறுதி கட்டமாக புனர்வாழ்வு பெற்று வந்த சிறுவர் போராளிகளான 108ஆண்களும், 90 பெண்களும் தமது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்த சிறுவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைவது பொதுமக்களின் கைகளில் உள்ளது. அவர்களுக்கான சமமான, போதியளவான கல்வி மற்றும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். நாட்டில் புதிய அத்தியாயம் ஆரம்பித்துள்ள நிலையில், அரசியற் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நலனுக்காக உழைக்க வேண்டும். சமூகங்கள் தமது வேற்றுமைகளை மறந்து அபிவிருத்திக்காக உழைப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

## கொழும்பு

எல்.ரி.ரி.ஈக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியின் ஒருவருட கொண்டாட்டம் கடும் மழையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, இம்மாதம் 18ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் முப்படைகளினதும் அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பில் ஆயுத தளபாடங்களும் அணிவகுப்புக்கு கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்வு வானொலி மற்றும் தொலைக்காட்சி வலையமைப்புக்களில் நேரடியாக ஒளி/ஒலிபரப்பப்பட்டன. இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, சர்வதேச சமூ கத்தில் மனித உரிமைகள் தொடர்பில் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை மறுத்தார். “யுத்தகளத்தில் போரிட்ட எங்கள் இராணுவ வீரர்கள் ஒரு கையில் ஆயுதத்துடனும், மறுகையில் மனித உரிமைகள் பிரகடனத்துடனும் போரிட்டனர். அத்துடன், விடுவிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகளையும் சுமந்து சென்றனர். வடக்கில் அவர்கள் முழுமையான மனிதாபிமானத்துடன் மக்களை நடத்தினர்” என ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதி காலப் பகுதியில் இடம் பெற்ற தாக கூறப்படும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பில் விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூ ன் மூவர் அடங்கிய நிபுணர்கள் குழுவொன்றை நியமித்துள்ளார். 2009ஆம் ஆண்டு மே மாதம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் அவருக்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒருங்கிணைந்த உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலின் நம்பகத்தன்மை தொடர்பில் விசாரித்து ஐ.நா செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதே இந்த குழுவின் பொறுப்பாகும். இந்த நடவடிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கடுமையான எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவை நியமித்துள்ளது. ஐ.நா செயலாளர் நாயகத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான லியம் பொக்ஸ், “செயலாளர் நாயகம் விரைவில் தமக்கு ஆலோசனை வழங்கக் கூடிய நிபுணர்கள் குழுவொன்றை அமைக்கவுள்ளார். இவர்கள் சர்வதேச தரங்கள் மற்றும் அனுபவங்கள் தொடர்பில் நம்பகத்தன்மையுடன் செயலாளர் நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பர்” என இலங்கைக்கான மூன்று நாட்கள் விஜயத்தின் பின்னர் குறிப்பிடுகின்றார். நிபுணர்கள் குழு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு மாறாததாக உள்ளது. அத்துடன், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் கவனஞ் செலுத்தியுள்ளது.

## சூழ்நிலையின் துரித மதிப்பிடல் (RCA)

உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடுகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது. சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியேயுள்ள மட்டத்தில் (பொது மக்கள், சர்வதேச சமுகம்) ஆலோசனைத் தேவைகளுக்காக இலங்கையின் மாவட்டங்களின் நிலைமைகள் பற்றிய விரிவானதும், நடுநிலையானதுமான தகவல்களை சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் வழங்கும். இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும்: peacepa1@cha.lk

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு
86, றொஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7, இலங்கை.
தொலைபேசி/தொலைநகல் : 94-114 610943